## மாதிரி திருப்புதல்த் தேர்வு வினாத்தாள் - 1 – ஜனவரி - 2022

வகுப்பு : 10 பாடம் : கணக்கு

நேரம் : 3 மணி மதிப்பெண் : 100

### பகுதி – I

குறிப்பு:
(i) இப்பிரிவில் உள்ள 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **(14 x 1 = 14)**

1) $n(A \text{ X } B) = 6$ மற்றும் $A = \{1, 3\}$ எனில், $n(B)$ ஆனது

(அ) 1 (ஆ) 2 (இ) 3 (ஈ) 6

2) $(a + 2, 4)$ மற்றும் $(5, 2a + b)$ ஆகிய வரிசைச் சோடிகள் சமம் எனில், $(a, b)$ என்பது

(அ) $(2, -2)$ (ஆ) $(5, 1)$ (இ) $(2, 3)$ (ஈ) $(3, -2)$

3) $R$ என்பது $A$ என்ற கணத்திலிருந்து $B$ என்ற கணத்திற்கான உறவு எனில் பின்வருவனவற்றில் எது சரி ?

(அ) $R = A \cup B$ (ஆ) $R = A \cap B$ (இ) $R \subseteq A \text{ X } B$ (ஈ) $R \subseteq B \text{ X } A$

4) $n(A) = p$ , $n(B) = q$ எனில், $A$ லிருந்து $B$ –க்கு கிடைக்கும் மொத்த உறவுகளின் எண்ணிக்கை யாது?

(அ) $p^q$ (ஆ) $q^p$ (இ) $2^{pq} - 1$ (ஈ) $2^{pq}$

5) யூக்ளிடின் வகுத்தல் துணைத் தேற்றத்தைப் பயன்படுத்தி, எந்த மிகை முழுவின் கனத்தையும் 9 ஆல் வகுக்கும் போது கிடைக்கும் மீதிகள்

(அ) 0, 1, 8 (ஆ) 1, 4, 8 (இ) 0, 1, 3 (ஈ) 1, 3, 5

6) 65 மற்றும் 117 – யின் மீ.பொ.வ-வை $65m - 117$ என்ற வடிவில் எழுதும் போது, $m$ -யின் மதிப்பு

(அ) 4 (ஆ) 2 (இ) 1 (ஈ) 3

7) $F_1 = 1, F_2 = 3$ மற்றும் $F_n = F_{n-1} + F_{n-2}$ எனக் கொடுக்கப்படின் $F_5$ ஆனது

(அ) 3 (ஆ) 5 (இ) 8 (ஈ) 11

8) $a, b, c$ என்பன ஒரு கூட்டுத்தொடர்வரிசையில் உள்ளன எனில் $\frac{a-b}{b-c} =$

(அ) $\frac{a}{b}$ (ஆ) $\frac{b}{c}$ (இ) $\frac{a}{c}$ (ஈ) 1

9) $x + y - 3x = -6, -7y + 7z = 7, 3z = 9$ என்ற தொகுப்பின் தீர்வு

(அ) $x = 1, y = 2, z = 3$ (ஆ) $x = -1, y = 2, z = 3$

(இ) $x = -1, y = -2, z = 3$ (ஈ) $x = 1, y = 2, z = -3$

10) $\frac{3y-3}{y} \div \frac{7y-7}{3y^2}$ என்பது

(அ) $\frac{9y}{7}$ (ஆ) $\frac{9y^3}{(21y-21)}$ (இ) $\frac{21y^2-42y+21}{3y^3}$ (ஈ) $\frac{7(y^2-2y+1)}{y^2}$

11) $\frac{x^2-25}{x+3}$ என்பதை $\frac{x+5}{x^2-9}$ ஆல் வகுக்கும் போது கிடைக்கும் ஈவு

(அ) $(x - 5)(x - 3)$ (ஆ) $(x - 5)(x + 3)$ (இ) $(x + 5)(x - 3)$ (ஈ) $(x + 5)(x + 3)$

12) $\frac{256\, x^8 y^4 z^{10}}{25\, x^6 y^6 z^6}$ - யின் வர்க்கமூலம்

(அ) $\frac{16}{5}\left|\frac{x^2 z^4}{y^2}\right|$ (ஆ) $16\left|\frac{y^2}{x^2 z^4}\right|$ (இ) $\frac{16}{5}\left|\frac{y}{xz^2}\right|$ (ஈ) $\frac{16}{5}\left|\frac{xz^2}{y}\right|$

13) $x^2 + 4x + 4$ என்ற இருபடி பல்லுறுப்புக் கோவை $x$ அச்சோடு வெட்டும் புள்ளிகளின் எண்ணிக்கை

(அ) 0 (ஆ) 1 (இ) 0 அல்லது 1 (ஈ) 2

14) $x^2 - 25 = 0$ – ன் தீர்வானது

(அ) மெய்யெண் தீர்வுகள் இல்லை (ஆ) சமமான மெய்யெண் தீர்வுகள்

(இ) சமமற்ற மெய்யெண் தீர்வுகள் (ஈ) கற்பனைத் தீர்வுகள்

### பகுதி – II

குறிப்பு:
(i) **10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
(ii) வினா எண் 28 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **(10 x 2 = 20)**

15) $A = \{m, n\}$ மற்றும் $B = \emptyset$ எனில் (i) A X B மற்றும் (ii) A X A காண்க.

16) $B \text{ X } A = \{(-2, 3), (-2, 4), (0, 3), (0, 4), (3, 3), (3, 4)\}$ எனில் $A$ மற்றும் $B$ ஆகியவற்றைக் காண்க.

17) $\boldsymbol{R}$ என்ற உறவு $\{(x, y) / y = x^2 + 3, x \in \{0, 1, 2, 3, 4, 5\}\}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பகத்தையும் வீச்சகத்தையும் காண்க.

18) $A = \{3, 4, 7, 8\}$ மற்றும் $B = \{1, 7, 10\}$ எனில் கீழ் உள்ள கணங்களில் எவை $A$ –இலிருந்து $B$ – க்கு ஆன உறவைக் குறிக்கின்றது?

(i) $R_1 = \{(3, 7), (4, 7), (7, 10), (8, 1)\}$

(ii) $R_2 = \{(3, 7), (4, 10), (7, 7), (7, 8), (8, 11), (8, 7), (8, 10)\}$

19) 3 ஆல் வகுக்கும் போது மீதி 2 - ஐத் தரக்கூடிய அனைத்து மிகை முழுக்களையும் காண்க.

20) $p_1^{x_1} \text{ x } p_2^{x_2} \text{ x } p_3^{x_3} \text{ x } p_4^{x_4} = 113400$ இங்கு, $p_1, p_2, p_3, p_4$ என்பன ஏறு வரிசையில் அமைந்த பகா எண்கள் மற்றும் $x_1, x_2, x_3, x_4$ என்பன முழுக்கள் எனில், $p_1, p_2, p_3, p_4$ மற்றும் $x_1, x_2, x_3, x_4$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.

21) ஒரு கூட்டுத்தொடர் வரிசையில், $t_{18} - t_{14} = 32$ எனில், அதன் பொது வித்தியாசத்தைக் காண்க.

22) $3 + k, 18 - k, 5k + 1$ என்பவை ஒரு கூட்டுத்தொடர்வரிசையில் உள்ளன எனில் $k$ – ன் மதிப்பு காண்க.

23) இரு மிகை முழுக்கள் $p$ மற்றும் $q$ ஆகியவற்றை $p = a^2b^3$ மற்றும் $q = a^3b$ என எழுத இயலும். $a, b$ என்பன பகா எண்கள் எனில், மீ.பொ.ம. $(p, q)$ x மீ.பொ.வ. $(p, q) = pq$ எனச் சரிபார்க்க.

24) ஒரு வேலையை **4** மணி நேரத்தில் பாரி செய்கிறார். யுவன் அதே வேலையை **6** மணி நேரத்தில் செய்கிறார் எனில் இருவரும் சேர்ந்து அந்த வேலையை செய்து முடிக்க எத்தனை மணி நேரமாகும்.

25) வர்க்கமூலம் காண்க : $16x^2 + 9y^2 - 24xy + 24x - 18y + 9$

26) காரணிப்படுத்தல் முறையில் தீர்க்க : $2x^2 - 2\sqrt{6}x + 3 = 0.$

27) ஒரு எண் மற்றும் அதன் தலைகீழி ஆகியவற்றின் வித்தியாசம் $\frac{24}{5}$ எனில், அந்த எண்ணைக் காண்க.

28) $\alpha, \beta$ என்பன $7x^2 + ax + 2 = 0$ –யின் மூலங்கள் மற்றும் $\beta - \alpha = \frac{-13}{7}$ எனில், $a$ -யின் மதிப்புக் காண்க.

## பகுதி – III

குறிப்பு:
(i) **10** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
(ii) வினா எண் **42** -க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **(10 x 5 = 50)**

29) $A = \{1, 2, 3\}$ , $B = \{2, 3, 5\}$, $C = \{3, 4\}$ மற்றும் $D = \{1, 3, 5\}$ எனில், $(A \cap C) X (B \cap D) = (A X B) \cap (C X D)$ என்பதைச் சரிபார்க்கவும்.

30) $A = \{x \in \mathbb{W} / x < 2\}$ , $B = \{x \in \mathbb{N} / 1 < x \leq 4\}$ மற்றும் $C = \{3, 5\}$ எனில், $A X (B \cup C) = (A X B) \cup (A X C)$ என்பது உண்மையா என சோதிக்கவும்.

31) $A = \{x \in \mathbb{W} / 0 < x < 5\}$ , $B = \{x \in \mathbb{W} / 0 \leq x \leq 2\}$ மற்றும் $C = \{x \in \mathbb{W} / x < 3\}$ எனில், $A X (B \cap C) = (A X B) \cap (A X C)$ என்பது உண்மையா என சோதிக்கவும்.

32) $A = \{x \in \mathbb{N} / 1 < x < 4\}$ , $B = \{x \in \mathbb{W} / 0 \leq x < 2\}$ மற்றும் $C = \{x \in \mathbb{N} / x < 3\}$ எனில், $(A \cup B) X C = (A X C) \cup (B X C)$ என்பதைச் சரிபார்க்கவும்.

33) ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் $7$ –வது உறுப்பு $-1$ மற்றும் $16$ –வது உறுப்பு $17$ எனில், அதன் பொது உறுப்பைக் காண்க.

34) ஒரு தாய் தன்னிடம் உள்ள ரூ. $207$ ஐ கூட்டுத்தொடர் வரிசையில் அமையும் மூன்று பாகங்களாகப் பிரித்துத் தனது மூன்று குழந்தைகளுக்கும் கொடுக்க விரும்பினார். அவற்றில் இரு சிறிய தொகைகளின் பெருக்கற்பலன் ரூ. $4623$ ஆகும். ஒவ்வொரு குழந்தையும் பெறும் தொகையினைக் காண்க.

35) ஒரு குளிர்காலத்தில் திங்கள்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை ஊட்டியில் வெப்பநிலை கூட்டுத் தொடர்வரிசையில் உள்ளன. திங்கள் கிழமை முதல் புதன் கிழமை வரை உள்ள வெப்பநிலைகளின் கூடுதல் $0^oC$ மற்றும் புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை உள்ள வெப்பநிலைகளின் கூடுதல் $18^oC$ எனில், ஐந்து நாட்களின் வெப்பநிலைகளைக் காண்க.

36) ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் $(m + 1)^{th}$ வது உறுப்பானது $(n + 1)^{th}$ வது உறுப்பின் இரு மடங்கு எனில், $(3m + 1)^{th}$ வது உறுப்பானது $(m + n + 1)^{th}$ வது உறுப்பின் இரு மடங்கு என நிறுவுக.

37) $x + y + z = 5, 2x - y + z = 9, x - 2y + 3z = 16$ என்ற மூன்று மாறிகளில் அமைந்த ஒருங்கமை நேரியல் சமன்பாட்டுத் தொகுப்பின் தீர்வு காண்க.

38) $x^4 + 3x^3 - x - 3$ மற்றும் $x^3 + x^2 - 5x + 3$ ஆகிய பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.வ காண்க.

39) $4x^4 - 12x^3 + 37x^2 + bx + a$ என்பது ஒரு முழுவர்க்கம் எனில் $a, b$–ன் மதிப்புகளைக் காண்க.

40) ஒரு பெண்ணின் வயது அவரது சகோதரியின் வயதைப் போல் இருமடங்கு ஆகும். ஐந்து ஆண்டுகளுக்குப் பின் இரு வயதுகளின் பெருக்கற்பலன் $375$ எனில், சகோதரிகளின் தற்போதைய வயதைக் காண்க.

41) ஒரு முக்கோணத்தின் அடிப்பக்கம் அதன் குத்துயரத்தை விட $4$ செ.மீ அதிகம். முக்கோணத்தின் பரப்பு $48$ ச.செ.மீ எனில், அம்முக்கோணத்தின் அடிப்பக்கம் மற்றும் குத்துயரத்தின் அளவுகளைக் காண்க.

42) $2x^2 - x - 1 = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்கள் $\alpha$ மற்றும் $\beta$ எனில் $\alpha^2\beta, \beta^2\alpha$ ஆகியவற்றை மூலங்களாகக் கொண்ட இருபடிச் சமன்பாட்டைக் காண்க.

## பகுதி – IV

குறிப்பு:
(i) இப்பிரிவில் உள்ள ஒவ்வொரு வினாவிலும் இரண்டு மாற்று வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
(ii) ஒவ்வொரு வினாவிலும் உள்ள இரண்டு மாற்று வினாக்களிலிருந்து ஒருவினாவைத் தேர்ந்தெடுத்து இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும். **(2 x 8 = 16)**

43) $x^2 + 2x + 5 = 0 = 0$ என்ற இருபடிச் சமன்பாட்டின் தீர்வுகளின் தன்மையை வரைபடம் மூலம் ஆராய்க. (அல்லது)

$(2x - 3)(x + 2) = 0$ என்ற இருபடிச் சமன்பாட்டின் தீர்வுகளின் தன்மையை வரைபடம் மூலம் ஆராய்க.

44) $y = x^2 + 3x - 4$ ன் வரைபடம் வரைந்து, அதன் மூலம் $x^2 + 3x - 4 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும். **(அல்லது)**

$y = x^2 - 5x - 6$ ன் வரைபடம் வரைந்து, அதன் மூலம் $x^2 - 5x - 14 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.